சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி [தன்னாட்சி]
எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி [மகளிர்]
வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*

**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-1 Part -1

Scanned by TapScanner

# புதுக்கவிதையில் பெண்ணியம்

**முனைவர் கோ. இரவிச்சந்திரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர், விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
எளையாம்பாளையம், தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

புதுக்கவிதையில் பெண்ணியம் என்ற தலைப்பிலமைந்த இக்கட்டுரையில் ஆண் கவிஞர்கள் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களான குழந்தைபிறப்பு, வரதட்சணை, திருமணம் முதிர் கன்னிகள், விலைமகள், பணிபுரியும் மகளிர் என அனைத்துப் பெண்ணியச் சிக்கல்களும் விளக்கப்பட்டுள்ளன. கட்டுரையின் முடிவில் தொகுப்புரையும் அதன் பிறகு இக்கட்டுரை எழுத பயன்படுத்தப்பட்டிருக்கும் ஆதாரங்கள் அடிக்குறிப்புகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

**முன்னுரை**

ஒரு படைப்பாளி ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் தன்னைச் சுற்றி நிகழ்கின்ற நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே தனது படைப்புகளைப் படைக்கின்றார். புதுக்கவிதை தோன்றிய காலத்தில் கவிஞர்கள் மேலை நாட்டுத் தாக்கத்தால் புதிய சோதனை முயற்சிகளை மேற்கொண்டு தங்களது மனஉளைச்சல்களின் வெளிப்பாடாகப் புதுக்கவிதைகளை படைத்தனர். வானம் பாடி இயக்கத்தின் வாயிலாக புதுக்கவிதை ஒரு புதிய பரிணாம வளர்ச்சியைப் பெற்றது. சமுதாயத்தில் மலிந்து காணப்படும் அவலங்களையும், சமுதாயச் சிக்கல்களையும் தம் கவிதைகளின் பாடுபொருளாய்க் கொண்டு அவ்வியக்கம் வெளியிட்டது. ஆண் கவிஞர்கள் சமூகப் பிரச்சினைகளை கண்டு தன் இயலாமையை வெளிப்படுத்தும் நிலை, அப்பிரச்சினைக்கு தீர்வு காண முயலும் போக்கு என இரு நிலைகளிலும் காணப்படுகிறது. ஆண் கவிஞர்கள் பெண்கள் பிரச்சினையை எவ்வாறு நோக்குகின்றனர் என்று ஆராய முற்படும்போது அவர்கள் பெண்களின் பிரச்சினைகளாக எவற்றைக் குறிப்பிட்டுள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. அவற்றை

1. குழந்தைப் பிறப்பு 2. வரதட்சணை
3. திருமணம்-முதிர்கண்ணியர் 4. விதவை நிலை
5. விலைமகள் 6. பணிபுரியும் மகளிர் என்று

பகுக்கலாம்.

**1. குழந்தைப் பிறப்பு**

இன்றைய நிலையில், சமுதாயத்தில் பெண் குழந்தைகள் பிறப்பதை எந்தப் பெற்றோரும் விரும்புவதில்லை. காரணம் பெண் குழந்தை திருமண வயது அடையும் போது அதற்கு வரதட்சணை கொடுத்தே திருமணம் செய்விக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே பெரும்பாலோர் பெண் குழந்தை பிறப்பதை விரும்புவதில்லை. ஒரு பெண்ணின் குரலாக கவிஞர் தன் கருத்தினை பின்வருமாறு ஏற்றிக் கூறுகிறார்.

> "சாமி ஒரு
> ஏழு வருஷமா எனக்குப் புள்ளையே
> பிறக்குது....
> இந்த வருஷமாவது எனக்கொரு
> ஆண்பிள்ளையைக் கொடு"[1]

என்ற கவிதையின் மூலம் பெண் குழந்தை பிறந்தால் அதற்குப் பொருள் செலவு செய்ய வேண்டும் அதனால் ஆண் குழந்தையே வேண்டும் என்ற கவிஞரின் கருத்து புலனாகிறது. மேலும் கோகிலா தங்கசாமி எனும் கவிஞர், தசரதப் பெருந்தேவிகளை நோக்கிக் கூறுவதாக, பெண் குழந்தைகள் பிறந்தால் வரதட்சனை கொடுத்து மாளமுடியாது. பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொன்றிருப்பார்கள் என்றும், இவ்வாறு



Scanned by TapScanner

பெண்களின் நிலையைக் கண்டு சும்மா இருந்ததால்தான் பார்வதி தேவியின் மூத்த மகனுக்கு திருமணமே நடைபெறவில்லை என்று கூறுகின்றனர்.[2]

பெண் குழந்தைகள் பிறப்பு பற்றிய கருத்தில் ஆண் கவிஞர்கள் வரதட்சணைக் கொடுமை ஒன்றே எனக் குறிப்பிட்டு பெண் குழந்தைப் பிறப்பை விரும்பாத நிலையை வெளிப்படுத்துகின்றனர்.

2. வரதட்சணை

பெண்களின் வாழ்கையில் வரதட்சணை என்பது மிகப்பெரிய அவலத்தைத் தரக்கூடிய சிக்கலாகக் காட்சியளிக்கிறது. மனித வாழ்வின் பிறப்பு, திருமணம், இறப்பு என்ற படிநிலைகளில் வரதட்சணை என்பது திருமணத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது.

குறிப்பாக வரதட்சணை என்பது பெண்களோடு தொடர்புடைய நிகழ்வாகக் கருதப்படுகிறது என்பதைக் கந்தர்வனின்,

"ஆண் பிறந்தால்
அட்சயப் பாத்திரம்
பெண் பிறந்தால்
பிச்சைப் பாத்திரம்"[3]

என்ற கவிதை வரிகள் உறுதி செய்கின்றன. பெண்களுக்கு திருமணம் என்பது முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. ஆனால் இன்றையத் திருமணங்கள் யாவும் பொருளாதாரத்தோடுத் தொடர்புடையதாக விளங்குகின்றது.

பல திருமணங்கள் நடைபெறாமல் போவதற்கு வரதட்சனைப் பிரச்சினையே காரணமாக அமைகின்றது. இத்தகைய நிகழ்ச்சிகள் அவ்வக் காலத்தில் தோன்றும் இலக்கியங்களில் பதிவாகின்றன. இதற்கு கவிதை என்ற இலக்கிய வகையும் விதிவிலக்கன்று.

வரதட்சனையைப் பற்றி ஆண் கவிஞர்களின் கருத்து எத்தகையது என்பதை அறிவது அவசியமாகின்றது.

ஆய்விற்கு எடுத்துக்கொண்ட ஆண் கவிஞர்களின் கவிதை நூல்களில் வரதட்சணைப் பற்றிய கவிதைகள் பதிவாகியுள்ளன. அக்கவிதைகள் வரதட்சணையால் ஏற்படும் பிரச்சனைகளையும், அதனால் குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களையும், அவற்றிற்குத் தீர்வாகச் சில வழிகளையும் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன.

இன்றைய சமூக அமைப்பில் இளைஞர்கள் பலரும் தனக்கு மனைவியாக வருபவள் இவ்வளவு சவரன் நகைகளும், இவ்வளவு பணமும் கொண்டு வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டே திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கின்றனர். அவன் எதிர்பார்த்த நிலையில் ஏமாற்றம் ஏற்படுகின்ற போது பல விளைவுகள் ஏற்படுகின்றன. அதனைக் கவிஞரின்

"வைர அட்டிகையும்
வரதட்சணை பாக்கிகளும்
உன்னுடைய
தந்தை வந்து
தராவிட்டால்
தோகையே
உன்னைத்
தொடமாட்டேன் - என்று
இளைஞர் சொல்வது
இன்றைய இல்லறம்"[4]

என்ற கவிதை வரிகள் வரதட்சணையாக வைர அட்டிகையும், பணமும் உன் தந்தை கொடுக்காவிட்டால் உன் உடலைத் தொடக்கூட மாட்டேன் என்று இளைஞர்கள் கூறுவதாய் குறிப்பிடுகின்றன. இந்நிலையானது கணவன் தன் மனைவியைவிட பொருள்களின் மீது கொண்டுள்ள மோகத்தினை தெளிவாகச் சுட்டுகின்றது.

காதல் என்பது இரண்டு மனங்கள் தொடர்புடையது என்பது பலரின் கருத்து. ஆனால் வரதட்சனைப் பிரச்சினை காதலுக்கும் தடையாக உள்ளது என்று



Scanned by TapScanner

கவிஞர் குறிப்பிடுகிறார். பொதுவாக காதலுக்குத் தடையாக விளங்குவது சாதி, மதம் ஆகியவையே என்று கருதுகிறோம். அவ்வரிசையில் வரதட்சனையும் இடம் பெற்றுவிட்டது. இருப்பினும் கவிஞரின் நோக்கு சிந்தனைக்குரியதாக அமைகின்றது. இதனை

"காதலனைக் கணவனாக்கத்
தடையாகக் குறுக்கே வந்த
சவரனுக்கும் சலவைத்தாளுக்கும்
கன்னப்பரப்பில் கண்ணீரால்
நான் போட்ட கோடு
ரொம்பவும் பெரிசு"[5]

என்ற கவிதை வரிகள் வரதட்சனைக் கொடுமையால் காதல் நிறைவேறாத பெண்ணொருத்தியின் குரலாக ஒலிக்கின்றது. மேலும் வரதட்சனைக் கொடுமையின் விளைவால் வாடும் பெண்களின் நிலை கண்டு வருந்தும் கவிஞர்களின் நிலை புலப்படுகிறது.

எங்களைத் தள்ளிவிட ஈன்றவர்களே விலை தர வேண்டிய நிலையிருக்கிறது. விலைகள் தொகையாகவும் பணமாகவும் இல்லாமல், கார்கள், கல் நகைகள், பங்களாக்கள் என்று பண்டமாற்று முறையில் நடப்பதுண்டு என்று கூறுகிறார் மற்றொரு ஆண் கவிஞர்.[6]

பெண்கள் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும், திருமணம் என்று வரும்போது வரதட்சனை கொடுக்க வேண்டியது கட்டாயமாகின்றது. இந்த நிலையைக் கண்ட கவிஞர் தன் கருத்தை பதிவு செய்கிறார்.

"எண்ணி ஒரு வருடம்
எந்தப் பெண்ணும்
எந்த ஆடவனையும்
மணப்பதில்லை என்று
சபதம் கொள்ளுங்கள்
ஒரு வருடம்-
ஒரு வருடந்தான்
வரதட்சணை
அது ஒரு தட்சணையாய் மாறும்
பின்
வரதட்சணை ஒழிப்புக்காய்
ஒரு சகாப்தம்
போராடட்டும்-இந்த
ஆடவர் சமுதாயம்"[7]

என்ற கவிதை வரிகள் பெண்கள் அனைவரும் ஒரு வருடத்திற்கு திருமணம் செய்து கொள்ள மாட்டோம் என்று முடிவெடுத்தால், இந்த ஆடவர் சமுதாயம் தாங்கிக் கொள்ள முடியாது. பின்னர்த் திருமணம் வேண்டும் என்று போரட வேண்டிய நிலைக்கு ஆட்படுவார்கள் என்று கவிஞர் புதிய கோணத்தில் சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.

இக்கவிதைகளின் வழி ஆண் கவிஞர்கள் வரதட்சணை வாங்குபவர்களைச் சாடுகின்ற நிலையையும், வரதட்சணைக் கொடுமையால் பெண்களும், பெண்களைப் பெற்றவர்களும் அல்லல் படுவதையும் கவிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். ஒரே ஒரு கவிதை மட்டும் பெண்கள் ஒரு வருடத்திற்கு திருமணம் புரிய மாட்டோம் என்று சபதம் செய்தால், ஆண்கள் வரதட்சணையின்றி திருமணம் செய்ய முன்வருவார்கள் என்ற தீர்வினைக் குறிப்பிடுகின்றது. எனவே வரதட்சணை என்ற பிடியில் சூழ்ந்திருப்பதைச் சுட்டுகிறார்களே ஒழிய அதன் மூலத்தை உணர்ந்து தீர்வு காண முயலும் போக்கு இருப்பதாகத் தென்படவில்லை. வரதட்சணைப் பிரச்சினையைப் பொறுத்தளவில் ஆண் கவிஞர்கள் தீர்வாக எதையும் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 3. திருமணம்:-

ஆண் கவிஞர்களின் படைப்பில் திருமணம் பற்றிய கவிதைகள் காணப்படுகின்றன. அவற்றோடு திருமண வயது வந்தும் பல்வேறு குடும்பச் சூழலினால் திருமணமாகாமல் காத்திருக்கும் முதிர்கன்னியர் நிலை பற்றிய கவிதைகளும் அதிகம் உள்ளன.



Scanned by TapScanner

திருமணம் என்பது இன்று பொருளாதாரத்தோடு தொடர்புடையதாகக் காட்சியளிக்கிறது. பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு திருமணம் நடைபெறுவதை மாற்ற வேண்டுமானால் 'சாதி' என்னும் பழைய வில்லை முறிக்க வேண்டும் எனக் குறிப்பிடும் கவிஞர்,

"சாதி என்னும் பழைய
வில்லை முறிக்காமல்
விவாகம் நடக்காது
இந்த வில்லை முறிக்க
இராமன்மார் வந்து
ரவுண்டடித்தால் போதாது
மாமன் மாரும் கொஞ்சம்
மனசு வைக்க வேண்டும்"[8]

என்ற கவிதை வரிகளின் மூலம் சமுதாயத்தில் சாதிகள் ஒழிய பிள்ளையைப் பெற்றவர்கள் முன்வர வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

திருமணம் முடிந்து வாழ்க்கை இன்பங்களைத் துய்த்த பின்னர் அறுபது வயதிலும் கூட வரதட்சணை கேட்கும் கூட்டம் ஒன்று இருப்பதாகக் கூறும் கவிஞர்

"போகிற
போக்கைப் பார்த்தால்
திருமணம் என்பதே
மூட நம்பிக்கையின்
பட்டியலில் சேர்க்கப்படலாம்"[9]

என்ற கவிதை வரிகளின் மூலம் திருமணம் என்பது மக்களின் வாழ்க்கையில் பின்பற்றப்படும் மூடநம்பிக்கைகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறார்.

முதிர் கன்னியர்:-

திருமண வயது வந்தும் மணமாகாமல் காத்திருக்கும் பெண்களை கவிஞர்கள் முதிர் கன்னியர் என்ற சொல்லாட்சியால் விளிக்கின்றனர். "வரதட்சனைக் கொடுமையாலும், சமுதாயத்தின் பல்வேறு கட்டு திட்டங்களாலும் திருமணமாகாமல் தவிக்கும் முதிர் கன்னியர் உணர்ச்சிகளுக்கு முதன் முதலாகப் புதுக்கவிதையில் முரசறைந்த மேத்தா" எனச் சி.இ.மறைமலை குறிப்பிடுகிறார்.

பெண்கள் திருமண வயது வந்தும் மணமாகாமல் இருப்பின் பெண்ணைப் பெற்றவர்கள் முதற்கொண்டு அனைவரது வெறுப்பிற்கும் ஆளாகின்றாள். இதனை கவிஞர் ஒருவர்,

"அல்லிப்பூ தாமரைப்பூ
ஆயிரம்பூ பூத்தாலும்
கல்யாணப் பூவெனக்குக்
காலமெல்லாம் பூக்கலையே...!
பெத்தவங்க சலிச்சாங்க
மத்தவங்க வெறுத்தாங்க
விக்காத சரக்குன்னு
வீதியெல்லாஞ் சிரிச்சாங்க"[10]

என்ற கவிதை வரிகளின் மூலம் திருமணத்திற்காக ஏக்கத்தோடு காத்திருக்கும் பெண்ணொருத்தியின் நிலையை வெளிப்படுத்துகின்றார்.

பெண்கள் வயதாகிப் போய்விட்டதால், என்று பூப்பானார்கள் என்பது கூடப் புரியாமல் போய்விட்டது. அவர்களுக்குக் காதல் வலை வீசுகின்ற இளைஞர்களிடம் கல்யாணப்பேச்சைப் பேசினாலே மறைந்து விடுகின்றனர்".[11] என்று மற்றொரு ஆண் கவிஞர் பெண்ணொருத்தியின் குரலாக தனது கவிதையை யாத்துள்ளார்.

விதவைகளின் நிலை

பல காலமாகவே பெண்கள் நிலை இரங்கத்தக்கதாகவே உள்ளது. எவ்வித உரிமையும் அவர்களுக்கு வழங்கப்படாமல் மறுக்கப்பட்டுள்ளன. ஆண் சமுதாயம் அவர்களைத் தங்களுக்கு கட்டுப்பட்டு வாழவேண்டி வலியுறுத்துகிறது. பெண்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஏதேனும் ஒரு வகையில் ஆண்களைச் சார்ந்து வாழவேண்டியுள்ளதால் பெண்கள், ஆண்களுக்கு அடிமை எனக் கருதப்பட்டார்கள்.



Scanned by TapScanner

பெண்கள் கணவனை இழந்தால் அவர்களுக்குப் பெரும் தீங்குகள் இழைக்கப் பெறுகின்றன என்பதை சங்க இலக்கியமான புறநானூறு பின்வருமாறு சுட்டுகின்றது.

"கண்ணீர்த் தடுத்த தண்ணனும் பந்தர்க்
கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி யுணவின் மனைவியோ டினியோ"[12]

கணவனை இழந்த பெண் மறுமணம் புரிவதில் தவறில்லை என்ற கருத்துடையவர் பாரதிதாசன். மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்து கொள்ளும் போது, கணவன் இறந்தால் ஏன் பெண்கள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது? என்பதை

"பேடகன்ற அன்றிலைப் போல், மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல் செயப் பெண் கேட்கிறான்!
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின்மணத்தல் தீதோ!
பாடாத தேனீக்கள், உலாவத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?"[13]

என்ற கவிதை வரிகளின் மூலம் மனைவி இறந்தவுடன் கணவன் மறுமணம் செய்து கொள்ள அனுமதி வழங்குகின்ற இந்தச் சமுதாயம் இளமையில் கணவனை இழந்த பெண்ணொருத்தி மறுமணம் புரிவதற்கு அனுமதி மறுக்கின்றது என்று சமுதாயத்தை பாரதிதாசன் சாடுகிறார்.

இன்றையச் சமுதாயத்தில், கைம்மைப் பெண்டிர்கள் தங்கள் தலையில் பூச்சூடிக் கொள்ளக் கூடாது என்ற நிலை உள்ளது. இதனை விதவைகள் வெறுக்கின்றனர். தாங்களும் பூச்சூடிக்கொள்ள விரும்புகின்றனர் என்பதை வேலுச்சாமியின் கவிதை

"வாசலில்
நின்றிருந்த வெள்ளை ரோஜாவின்
சின்னக் கைகள்
அவிழ்ந்த கூந்தலை
ஆசையோடு வருடும்"[14]

என்ற கவிதை வரிகள் உணர்த்துகின்றன. விதவைகளுக்கு இழைக்கப்படும சமுதாயக் கொடுமைகளை அவர்கள் மனதளவில் வெறுக்கின்றனர் என்பதை,

"....................
அந்த
இருபது வயது
இளம் விதவையின்
நெஞ்சில்
நெருப்புப் பொறியின் சத்தம்"[15]

என்ற கவிதை குறிப்பிடுகின்றது.

## விலை மகளிர்

விலை மகளிர் பலர் சூழ்நிலை காரணமாகவே அந்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பெண்ணொருத்தி விலை மகளாகக் காரணம், சமுதாய அமைப்பே என்றாலும் சமுதாயம் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. சமுதாயத்தின் பார்வையில் விலைமகள் என்பவள் குற்றமிழைத்தவளாகவே கருதப் பெறுகிறாள். இந்தச் சமுதாயம் அவர்களைக் கடுமையாக விமர்சனம் செய்ய, அதைக் கண்டு விலைமகளிர் இச்சமுதாயத்தை வெறுக்கின்றனர்.

சமுதாயத்தில் வசதியாக வாழவேண்டும் என்பதற்காகச் சில பெண்கள் ஆசை வார்த்தைகட்கு மயங்கி, தம்முடைய வாழ்வை வீணாக்கிக் கொள்ளும் நிலை உள்ளது. அவ்வாறு தம் பெண்மையை இழந்தமைக்குத் தண்டனையாக அப்பெண்கள் காலங்காலமாய் விமோசனத்திற்குக் காத்திருக்க வேண்டியுள்ளது என்பதை,

"வறுமைக் கௌதமனால்
வதங்கிய வாழ்வில்
வசந்தங்கள் வருமென்று
இந்திர எத்தர்களின்
வசீகர மொழியில் மயங்கிப்
பெண்மையை இழந்ததன்
தண்டனையாகக் காலம் காலமாய்
ஒரு காலடிக்கு
காத்திருக்கும்......"[16]



Scanned by TapScanner

என்ற கவிதை வரிகள் மூலம் பெண்கள் ஆண்களின் ஆசை வார்த்தைகளால் பெண்மை இழந்து வாடுகின்றனர் எனக் குறிப்பிடுகிறார் கவிஞர்.

பெண்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய விபச்சாரம் செய்ய வேண்டியுள்ளதே என்பதை...

"ரோஸி...
அவள்...
அடுத்த பகலின் அடுப்பெரிய
ஒவ்வொர் இரவிலும்
விளக்கணைக்கும் ஒருத்தி"[17]

என்ற கவிதை வரிகள் சுட்டுகின்றன. இத்தகைய பெண்களுக்கு மதங்கள் மன்னிப்பை தருகின்றனவே தவிர மணவாழ்கையைத் தருவதில்லை என்று கூறும் கவிஞர் விலைமகளுக்கு மறுவாழ்வு அளிப்பதை வற்புறுத்துவதாக அமைந்துள்ளது.

பணிபுரியும் மகளிர்

இல்லற வாழ்வில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் பலர் கணவன் வேண்டுகோளுக்கிணங்கியோ அல்லது கணவனின் தாய் தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டோ அலுவலகங்களில் வேலை பார்க்கின்ற நிலை உள்ளது. மேலும் செல்வச் செழிப்பில் திளைக்கின்ற பெண்கள் பொழுது போக்கிற்காகப் பணிபுரிவதும் உண்டு. நடுத்தரக் குடும்பத்தில் இல்லறத்தில் ஏற்படுகின்ற பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க நடைமுறை வாழ்க்கையில் கணவன் மனைவி என்ற இருவருமே பணிபுரிய வேண்டியுள்ளது.

"பணிபுரியும் மகளிர்கட்கு இந்த உலகம் திறந்த வெளிச்சிறையாகக் காட்சியளிக்கிறது என்று ஒரு கவிஞர் குறிப்பிடுகிறார்".[18]

ஆண் சமுதாயம் பெண்களைப் போகப் பொருளாகவே நோக்குகின்றது. அதற்குப் பணிபுரியும் மகளிரும் விதிவிலக்கல்ல. அவர்களும் ஆண்களுக்கு மத்தியில் தான் பணிபுரிய வேண்டியுள்ளது. ஆண்களுக்கு மத்தியில் பணிபுரிவது பெண்களுக்கு மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது.

ஆண்களில் சிலர் ஆரோக்கியப் பார்வை அற்றவர்களாகவே இருக்கின்றனர் என்பதைப் பெரும்பான்மையான கவிதைகள் சுட்டிக் காட்டுகின்றன.

"சில ஆண்களின்
ஆரோக்கியமில்லாத பார்வைகள்
கம்பளிப் பூச்சியாய்
உன் முதுகில் ஊரும்
சிலர்
கோப்புகளை வாங்கும்போது
அவர்களின்
விரல்களையும் விசாரிப்பார்கள்"[19]

என்ற கவிதை வரிகள் மேற்கண்ட கருத்திற்குச் சான்றாகத் திகழ்கின்றது.

அலுவலகத்தில் பணிபுரியும் பெண்கள் தன்னைச்சுற்றி வேலை செய்யும் அதிகாரிகளின் சொல்லுக்கும், செயலுக்கும் கட்டுப்பட்டும் அவர்களது காமப்பார்வைகளுக்கு பயப்பட்டே வாழ வேண்டியுள்ளதை,

"வேலை தேடிப் போன
ஒவ்வொரு மாளிகையும்
விதம் விதமாக
காமவெறிக் கானகமாய்..."[20]

என்ற கவிதை வரிகள் புலப்படுத்துகின்றன.

"ஒவ்வொரு அலுவலகமும்
அங்குலமாய் பெண்ணை
அளவிடும் விஷம ஆய்வுச் சாலையாய்..."[21]

என்ற கவிதை வரிகள் மூலம் கவிஞர் மு.மேத்தா பெண்கள் அலுவலகத்தில் தக்க மரியாதையோடு நோக்கப்படுவதில்லை என்பதை எடுத்துரைக்கிறார்.

தொகுப்புரை

ஆண் கவிஞர்கள் பெண் குழந்தை பிறப்பைப் பற்றிக் குறிப்பிடும் போது பெண்குழந்தை பிறப்பை விரும்பாத நிலைக்கு வரதட்சணைக் கொடுமையே காரணம் என்று கூறுகின்றனர்.



Scanned by TapScanner

வரதட்சணைக் கொடுமை பற்றிப் பேசுகின்ற போது இன்றையச் சமுதாயமே என்று சமுதாயத்தை சாடுகின்றார். வரதட்சணைக் கொடுமையின் விளைவால் திருமண வயது வந்தும் திருமணமாகத நிலையில் பெண்கள் இருப்பதை கண்டு மனம் குமுறுகின்றனர்.

கணவனை இழந்த பெண்ணின் நிலை கண்டு வருந்தும் கவிஞர்கள் விதவைகளுக்குத் திருமணம் நடைபெற வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

விலைமகளிரைப் பற்றிக் குறிப்பிடும்போது இன்றைய சமுதாய அமைப்பே பெண்கள் விலைமகளிராக மாறுவதற்குக் காரணம் எனக் கூறி விலைமகளின் நிலை கண்டு இறக்கப்படுகின்றனர். ஆனால் ஒரே ஒரு கவிஞர் மட்டும் பெண்கள் சோரம் போவதற்கு ஆண்களே காரணம் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பணிபுரியும் மகளிர் நிலையைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஆணாதிக்கச் சமுதாயமே பெண்கள் படுகின்ற அவலங்களுக்குக் காரணம் என்று கூறுவது நோக்கத்தக்கது.

**துணைநூல்கள்**


1. அனிதா, கைமாறும் இணையாழி. சூரியன் பதிப்பகம், சென்னை.1985.ப.106
2. கோகிலா தங்கசாமி, நீந்தத்தெரியாத மீன்கள்.விஜயா பதிப்பகம், கோவை. 1983. ப.23
3. கந்தர்வன், கிழிசல்கள், அகரம் வெளியீடு, சிவகங்கை, 1981. ப.20
4. மு.மேத்தா, அவர்கள் வருகிறார்கள். நர்மதா பதிப்பகம், சென்னை, 1984. ப.28
5. பிரதிபா ஜெயசந்திரன், புத்தகத்திலிருந்து புறப்பட்ட பிரதிமை. காவ்யா புக்ஸ், பெங்களுரு.1980 ப.24
6. இரா.வேலுச்சாமி. குருச்சேத்திரம். சிலம்பா பதிப்பகம். சென்னை. 1981.ப.47-48
7. மருதூர்.ச.அரங்கராசன். ஓர் அழுகை ஆதரவு தேடுகின்றது. பாலமுருகன் பதிப்பகம், மருதூர். 1984.ப.83
8. மு.மேத்தா, மு.கா.நூல். நர்மதா பதிப்பகம், சென்னை. 1984. ப.38
9. கோகிலா தங்கசாமி, மு.க.நூல். விஜயா பதிப்பகம். கோவை. 1983.ப.67
10. வைரமுத்து, ரத்ததானம். கலைஞன் பதிப்பகம். சென்னை. 1985. ப.37
11. மு.மேத்தா, மு.கா.நூல். நர்மதா பதிப்பகம், சென்னை. 1984. ப.38
12. புறநானூறு. பாடல்.250. பாரிநிலையம், 184, சென்னை. 2002.
13. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள். பாரிநிலையம், 184, 2000. சென்னை.ப.4
14. இரா.வேலுச்சாமி, கனவுத்தேர்கள். தமிழ் புத்தகாலயம். சென்னை. 1981.ப.20
15. மேலது, கனவுத்தேர்கள். தமிழ் புத்தகாலயம். சென்னை. 1981. ப.21
16. அகல்யா, அடிவானத்துக்கு அப்பால். அன்னம் பிரைவேட் லிட். சிவகங்கை.1982. ப.10
17. இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள். கலைஞன் பதிப்பகம். சென்னை. 1989. ப.94
18. இரா.வைரமுத்து. இன்னொரு தேசியகீதம். கலைஞன் பதிப்பகம். சென்னை. 1982. ப.48
19. சிற்பி, மௌன மயக்கங்கள். கோளம் வெளியீடு, பொள்ளாச்சி, 1982. ப.49
20. மேலது. கோளம் வெளியீடு, பொள்ளாச்சி, 1982.ப.49
21. மு.மேத்தா, காத்திருந்த காற்று. நர்மதா பதிப்பகம், சென்னை. 1982.ப.39


ஃ



Scanned by TapScanner